**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குதல் – தலா ரூ.1500/– வீதம் 25000 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.3,75,00,000/– நிதி ஒப்பளிப்பு– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை**

அரசாணை(நிலை) எண்.198

நாள் 02.09.2013
விஜய ஆவணி 17
திருவள்ளுவர் ஆண்டு 2044

**படிக்கப்பட்டது:–**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை, நாள் 08.05.2013
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.16925/ 2013/ஜி2–1, நாள் 20.05.2013.

——————

**ஆணை:–**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8.5.2013 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> “கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, ஒரு நெசவாளருக்கு 1500/– ரூபாய் வீதம், 25000 நெசவாளர்களுக்கு 3 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்கப்படும்.”

/த.பி.பா/

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், தார் சுற்றும் பணி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மகளிரால் கையினால் சுற்றப்பட்டு நெசவுத் தறியில் ஊடை நூலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும், இவ்வாறு கையினால் தார் சுற்றும் இயந்திரத்தைக் கொண்டு நூல் சுற்றப்படும்போது மிகுந்த காலதாமதம் ஏற்படுவதுடன் நூல் ஒரே சீராக சுற்றப்படாமை மற்றும் நூல் அடிக்கடி அறுபடுவதன் காரணமாக முடிச்சு போடுதல் போன்ற குறைபாடுகள் ஏற்பட்டு நெசவின் தன்மை பாதிக்கப்படுவதுடன் நெசவு உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தனது கடிதத்தில், கைத்தறி நெசவுத் தொழில் ஒரு குடும்பத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு, அக்குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் இத்தொழிலில் ஈடுபட்டு, நெசவு வருமானமே வாழ்வாதாரமாக இருந்தது எனவும், காலப்போக்கில் விவசாயம் மற்றும் பிற தொழில்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் தொழிலாக மாறிய காரணத்தால், வயது முதிர்ந்தோர்கள் மட்டும் நெசவுக்கு முந்தைய தார் சுற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதன் காரணமாக, தார் சுற்றும் பணியில் போதிய அளவு நெசவுக்கு தேவையான ஊடை நூல் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது எனவும், நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குவதன் மூலம் நெசவாளர்களின் வேலைப் பளு குறைந்து உற்பத்தி இரு மடங்காக அதிகரிப்பதோடு, நெசவாளர்களின் வருமானமும் இரட்டிப்பாகும் எனவும், நெசவுத் தொழிலுக்கான ஊடை நூல் கிடைப்பதில் உள்ள கால தாமதமும் தவிர்க்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தனது கடிதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், ஒரு நெசவாளருக்கு ரூ.1500/– வீதம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 25000 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குவதற்காக மொத்தம் ரூ.3,75,00,000/– (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறும் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையை செயல்படுத்தும் பொருட்டு, மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று ஒரு நெசவாளருக்கு ரூ.1500/– வீதம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 25000

.....3.

கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குவதற்காக மொத்தம் **ரூ.3,75,00,000/–** (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி **5–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.3,75,00,000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

> “2851-00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – KX. கைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி – **09.** உதவித் தொகை – **03.** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
>
> (த.தொ.கு.2851–00–103–KX–0932)

**7.** மேலே பத்தி **5–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**8.** மேலே பத்தி **5–**ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி (New Service) குறித்த திட்டமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வரவு – செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வரவு–செலவு பொது–1) / தொழில்கள்)த் துறைக்கு அனுப்புமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**9.** மேலே பத்தி **5–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை **2013–2014**–ஆம் ஆண்டுக்குள் செலவு செய்து அத்தொகை முறையாக செலவிடப்பட்டது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

/த.பி.பா/

10. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.36035/Ind/2013, நாள் 15.7.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.760 (எழு நூற்று அறுபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
சென்னை – 600 008.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை– 600 009.
நிதித் (தொழில்கள்) / வ.செ.பொ.I / II துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்